# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2216/11 - 2021 පෙබරවාරි මස 23 වැනි අඟහරුවාදා - 2021.02.23

*2216/11 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (xv) (A)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும், 2006, யூன் 09 ஆந் திகதிய 1448/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அதன் நிரல் I இல் காணப்படுகின்ற "மருத்துவ பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததாக அதன் நிரல் II இல் காணப்படுகின்ற "1. உடற்கூற்றியல் துறை" மற்றும் "6. நுண்ணுயிர் ஆய்வியல் துறை" என்னும் பதிவுகளுக்குப் பதிலாக முறையே "1. உடற்கூற்றியல், மரபணுக்கள் மற்றும் உயிரி மருத்துவ தகவலியல் துறை" அத்துடன் "6. மருத்துவ நுண்ணுயிரியியல் மற்றும் தடுப்பாற்றியல் துறை" என்னும் பதிவுகளை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்**,
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2021, பெப்புருவரி 18.*

*03-231*


1A - PG 5328 — 1027 (2021/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச. வ. பி. 21/78* (xv) (A)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*21 ஆம் மற்றும் 139 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும், (2020, யூலை 30 ஆந் திகதிய 2186/ 27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2009, மே 28 ஆந் திகதிய 1603/ 35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையிலுள்ள "மானிடவியல் மற்றும் சமூகவிஞ்ஞான பீடம்" என்னும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக "மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்" என்னும் விடயத்தை இடுவதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்**,
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2021*, பெப்புருவரி *18*.

*03-232*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.